DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 33/2024** |
| Deposition of Witness for | : PW 5 |
| Name | : டாக்டர்.அகிலாண்டபாரதி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 19.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 19th February 2026.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**<u>முதல்விசாரணை:</u>**

நான் தற்போது சங்கரன்கோவிலில் தனியார் மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். 01.09.2015 அன்று சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் நான் பணியில் இருந்தபோது இரவு 8.45 மணியளவில் உத்தண்டகாளை என்பவர் என்னிடம் சிகிச்சைக்கு வந்தார். அவர் தன்னை ஒரு இனம் தெரிந்த நபர் இரவு 7.30 மணியளவில் வடக்குபுதூரில் புதிய தமிழகம் கட்சி கொடிக்கம்பத்தின் அருகே வைத்து அரிவாளால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்தபோது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1. இடது முன்கையில் 9–10 செமீ நீளமுடைய தோல் ஆழத்திற்குரிய வெட்டுக்காயம் காணப்பட்டது. அவரால் அவரது கையை நன்றாக அசைக்க முடிந்தது.

2. வலது முன்கையில் 1x1 செமீ அளவில் கடித்ததற்கான காயம் காணப்பட்டது. நான் அவரை உள்நோயாளியாக அனுமதித்தேன். அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்ட அஆவணங்களை பார்வையிட்டு அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று

சான்று வழங்கினேன். அந்த **காயச்சான்று அ.சா.ஆ.2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை</u>**

இருசக்கரவாகனத்தில் சென்றுகொண்டிருக்கும் ஒரு நபர் கூர்மையான பகுதியில் கீழே விழுந்தால் நான் முதல்விசாரணையில் கூறிய 1வது காயம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட கருவியாக எந்த ஆயுதத்தையாவது காண்பித்து என்னிடம் கருத்துரை பெற்றார்களா என்றால் இல்லை. ஒவ்வொரு நபர்களுக்கும் அவர்களது பல்வரிசை வேறுபட்டு காணப்படும் என்றால் சரிதான். 2வது காயம் காயம்பட்ட நபரே தன்னை கடிப்பதன் மூலம் ஏற்படுத்திக்கொள்ள வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.

**மறுவிசாரணை இல்லை.**